மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புச் சாலையைப் பொறுத்தமட்டில், கரும்புச் சாலை என்று சொல்லப்படுகின்ற சாலைகளைப் பராமரிக்கின்ற பணிகளிலே சர்க்கரை ஆலைகளை நாம் ஈடுபடுத்தினாலும் கூட, பொதுவாக நெடுஞ்சாலைத் துறைக்கு கீழே உள்ள சாலைகளை நாம் அவர்களுக்குக் கொடுப்பது கிடையாது, அது நம்முடைய கன்ட்ரோலில்தான் இருக்கிறது, ஆகவே, இதற்குரிய நடவடிக்கையை நான் ஏற்கனவே தெரிவித்தது போல நாங்களே நேரிடையாகப் பார்த்திருக்கிறோம். அதை எப்படிச் செய்ய வேண்டுமென்பதிலே அரசு ஆய்வு செய்து வருகிறது. எந்த அளவுக்கு அவர்களிடமிருந்து நிதி ஆதாரங்களைப் பெறமுடியும் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏன் என்று சொன்னால் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணிகளை அவர்களுக்கு வழங்கினால் பின்னால் அவர்கள் கிளெய்ம் செய்யக் கூடும், ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இதற்குத் தகுந்த பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 149, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

149—

திருவட்டார் தொகுதியில் திற்பரப்பு அணையை உயர்த்துதல்.

*** 20259 — திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் திற்பரப்பு அணையை 5 அடி உயரத்திற்கு உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1994 ஜனவரி 4]

திரு .இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். உண்மையிலேயே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு சீசனிலும் மழை பெய்து அங்குள்ள ஆறுகள் எல்லாம் ஜீவநதியாக ஓடுகின்றன. இந்தத் தண்ணீரை நாம் அணைகளில் தேக்கி வைக்க முடியாமல், தேக்கி வைத்தது போக ஒரு சதவீதம் அதாவது 7,200 மி.க. அடி தண்ணீர் வீணாகக் கடலில் வருடம் தோறும் சென்று கொண்டிருக்கிறது. குடிக்கத் தண்ணீர் இல்லை, அல்லது பஞ்சமாக இருக்கின்ற காலங்களில் எல்லாம் நாம் உபயோகிக்க கொஞ்சமாகவாவது தேக்கி வைக்கவேண்டும். அதற்காக மட்டுமல்ல, ராஜா காலத்தில் கட்டப்பட்ட திற்பரப்பு அணை மிகவும் உயரம் கம்மியாக இருக்கிறது. 5 அல்லது 6 அடி உயரத்திலேதான் அந்த அணை இருக்கிறது. மேலும் ஒரு 5 அல்லது 6 அடி உயரம் கூட்டுவதாக இருந்தால் இன்னும் நூற்றுக் கணக்கிலே, ஆயிரக்கணக்கிலே ஏக்கரா நிலங்களில் விவசாயம் செய்யலாம். ஆகையால்தான், 5 அல்லது 6 அடி உயர்த்த வேண்டும் என்று சொன்னோம். அதுமட்டுமல்லாமல், 5, 6 அடி உயர்த்துவதாக இருந்தால்தான் நிறையத் தண்ணீரைத் தேக்கி நிறுத்துவதாக இருந்தால்தான் நீர்மட்டம் உயரும். அப்பொது அங்குள்ள கிணறுகளிலே எல்லாம் எப்பொழுதும் குடிப்பதற்குத் தண்ணீர் தாராளமாக கிடைக்கும். ஆகவே, கருணைகூர்ந்து அமைச்சர் அவர்கள் 5 அடி உயர்த்த வருகிற ஆண்டிலாவது உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிலே குறிப்பிடப்பட்டிருக்கிற திற்பரப்பு அணை என்பது ஒரு தடுப்பு அணை. இது பாறைப் பகுதிகளிலே கட்டப்பட்டிருக்கிறது. இதனுடைய பாசனத்திற்குரிய பகுதி 975 ஏக்கர். இப்பொது இருக்கின்ற பிரச்சினை அதற்குரிய பாசனப் பரப்புகள் எல்லாம் கரைகளையொட்டி அமைந்து இருப்பதனாலே, பாசனப் பரப்பை நீட்டிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அது தவிர, மரங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. ஆற்றங்கரை ஓரங்களிலே அமைந்திருக்கின்ற காரணத்தினால், உள்ளபடியே அந்த நீர்ப்பிடிப்பு பகுதிகளிலே ரப்பர் போன்ற மரங்கள், தென்னை போன்ற மரங்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே அவைகள் மூழ்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அணையை உயர்த்தினால் நீர்ப்பிடிப்பு அதிகமாக வரும். உள்ளே இருக்கின்ற நிலங்களையும் கையகப்படுத்த வேண்டும். ஆகவே, பாசனப் பரப்புக்கு கையகப்படுத்துகின்றபோது, இவைகளை எல்லாம் பூார்க்கின்றபோது காஸ்ட் அதிகமாகின்ற காரணத்தினாலேதான் இந்தத்

திட்டத்தை எடுப்பதைக் காட்டிலும் இதை அப்படியே செயல்படுத்த வேண்டுமென்று அரசு தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது. போதுமானதாக இந்த அணையின் உயரம் இருக்கின்ற காரணத்தினால் இனிமேல் பாசனப் பரப்பை அதிகப்படுத்தத் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை மறுபரிசீலினை செய்யவேண்மென்று அதிகாரிகளுக்குத் தெரிவித்து எவ்வளவு தூரம் இந்தப் பாசனப் பரப்பை அதிகப்படுத்தலாம், இதை உயர்த்தினால் எவ்வளவு தூரம் உள்ளபடியே இருக்கின்ற மரங்கள் எல்லாம் பாதிக்கப்படும் என்பதையெல்லாம் ஒரு கணக்கு செய்து, அது இந்த அரசாங்கத்திற்கும், பொதுமக்களுக்கும் சாதகமாக இருக்குமானால், இந்த அரசு அதை மறுபரிசீலனை செய்யும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யலாம் என்று சொன்னதற்கு நன்றி. அந்த 5 அடியை உயர்த்துவதாக இருந்தால் அங்கே தாராளமாக புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்தப் புறம்போக்கில் தான் தண்ணீர் தேங்கும். தவிர பட்டா பூமியில் தேங்காது. அதுமட்டுமல்ல விவசாயத்திற்குத் தண்ணீர் வருவதற்கு அணை கட்டப்படுவதாக இருந்தால், ரப்பர் போன்ற பயிர்களை மாற்றி நெல் விவசாயம் செய்வதற்கு அங்குள்ள விவசாயிகள், ஏழை மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், கருணைகூர்ந்து அந்த டேமில் 5 அடி உயர்த்த உடனடியாக ஆணை இடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல் ஒரு புதிய அணை கட்ட வேண்டுமென்றால், இருக்கின்ற அணையை உயர்த்த வேண்டுமென்றால், நீர்ப்பிடிப்பு பகுதிகளிலே இருக்கின்றவர்கள் பிரச்சினையை உருவாக்குகிறார்கள். அதுபோன்று பல்வேறு திட்டங்களிலே நிலம் கையகப்படுத்துகின்றபோது பொதுமக்கள் எதிர்ப்பு வருகிறது. அரசாங்கம் அந்தப் பிரச்சினையை மிகச் சுமுகமாக தீர்க்க வேண்டியிருக்கிறது. காலதாமதம் ஏற்படுகிறது. அப்படிப் பிரச்சினைகள் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். ஆகவே, மறுபரிசீலினை செய்யும்போது, அப்படிப் பிரச்சினைகள் வருமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இருந்து அரசுக்கு உதவியை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஏற்கெனவே தெரிவித்ததைப் போல் இந்தப் பிரச்சினையை மறு ஆய்வு செய்வதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தமிழக அரசின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.